**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(05.09.2015 முதல் 09.09.2015)**

**அறிக்கை எண் 69/2015** **தேதி: 04.09.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 31°செ முதல் 39°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22°செ முதல் 29°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 27°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசான மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (05.09.2015 முதல் 09.09.2015)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-82 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 56-58 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 05.09.15 | 8 | 33 | 24 | 7 | 82 | 58 | 10 | தெற்கு |
| 06.09.15 | 5 | 33 | 24 | 6 | 82 | 58 | 10 | தெற்கு |
| 07.09.15 | 4 | 33 | 23 | 6 | 80 | 56 | 10 | தெற்கு |
| 08.09.15 | 2 | 34 | 23 | 6 | 80 | 56 | 10 | தெற்கு |
| 09.09.15 | 3 | 34 | 23 | 6 | 80 | 56 | 10 | தெற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களான மஞ்சள் பயிருக்கு மேலுரமாக ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா மற்றும் 10 கிலோ பொட்டாஷ் உரங்களை இடவும்.
- ✓ காற்றின் ஈரப்பதம் மற்றும் வேகம் அதிகமாக உள்ளதால் மஞ்சளில் இலைப்புள்ளி நோய் பரவ வாய்ப்புள்ளது. இதைக்கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு 1 கிலோ மேங்கோசெப் அல்லது 1.25 கிலோ காப்பர் ஆக்சி குளோரைடு மருந்தினை தெளிக்கவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் இறவை மரவள்ளி கிழங்கு நடவு செய்வதற்கு இதுவே உகந்த தருணமாகும். நடவு செய்யும் மரவள்ளிக்கிழங்கின் கரணைகள் 15 செ.மீ நீளமும் 8 முதல் 10 கணுக்கள் உள்ளனவாகவும் மேலும் தண்டின் நடுப்பகுதியில் வெட்டப்பட்டவையாகவும் இருக்க வேண்டும். கரணைகளை நடவு செய்வதற்கு முன்பு 1 கிராம் கார்பன்டசிம் மருந்தினை1 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நிமிடம் ஊரவைக்கவும்.
- ✓ கொசுக்களை தடுக்க கால் நடை கொட்டகைகளில் தண்ணீர் தேங்காமல் பாதுகாக்கவும்.
- ✓ மழை பெய்தவுடன் வட கிழக்கு பருவகால தானியம், நிலக்கடலை நடவு செய்ய மானாவாரி நிலங்களை தயார் செய்யவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ வரும் ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கபடுகிறது. மழை பெய்தவுடன் வட கிழக்கு பருவகால தானியம், நிலக்கடலை நடவு செய்ய மானாவாரி நிலங்களை தயார் செய்யவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**